**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**<u>C.C.No. 81 of 2023</u>**

அரசுதரப்பு **5 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : புருஷோத்தமன் | வயது | : 65 |
| தந்தை பெயர் | : கண்ணையாபிள்ளை | தொழில் | : பணி ஓய்வு |
| கிராமம் | : திருவதிகை | ஜாதி | :-------- |
| தாலுக்கா | : பண்ருட்டி | சமயம் | : |
| மாவட்டம் | : கடலூர் | மொபைல் | : 88254 30880 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 11.08.2026 நாளாகிய இன்று திருமதி.**S.**ப்ரியா**, B.A., B.L.,(Hons), M.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>**(**எதிரிகள் **2, 3, 5** முதல் **7, 9** எதிரிகள் முன்னிலை**. 4, 8** எதிரிகள் ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. 1**வது எதிரி இறந்துவிட்டார்**.** வழக்கறிஞர்கள் முன்னிலை**)**</u>

<u>முதல் விசாரணை**:**</u>

நான் கடலூர் மாவட்டம் திருவதிகையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இறந்துபோன 1-ம் எதிரி மாரிமுத்துவை எனக்கு தெரியும். 1-ம் எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அதனால் அவரை எனக்கு தெரியும். 1-ம் எதிரி ஏலச் சீட்டு நடத்திக் கொண்டிருந்தார். நான் நடை பயிற்சி செல்லும்போது அவரை பார்த்து பேசி பழகியுள்ளேன். அப்போது அவர் என்னிடம் தான் ஏலச்சீட்டு நடத்தி வருவதாகவும், அதில் நான் சேர்ந்தால் கசர் தொகை அதிகமாக கிடைக்கும் என்று என்னிடம் கூறினார். ரூ.15 லட்சம், ரூ.10 லட்சம், ரூ.5 லட்சம், ரூ.4 லட்சம், ரூ.3 லட்சம், ரூ.2 லட்சம், ரூ.1 லட்சம் சீட்டுகள் நடத்தி வந்தார். நான் ரூ.2 லட்சம் சீட்டில் 01.11.2020ல் சேர்ந்தேன். அந்த சீட்டானது 20 மாத தவணை கொண்ட சீட்டாகும். அந்த சீட்டை சுமார் 8 மாத காலம் வரை அதாவது 01.06.2021 வரை கட்டிக் கொண்டிருந்தேன். அதுவரையிலும் மொத்த தொகை ரூ.48,650/- செலுத்தியிருந்தேன். மாதத் தவணை தொகையை 1ம் எதிரி மாரிமுத்துவிடம் கொடுப்பேன். அவர் இல்லாத சமயத்தில் அவரின் மனைவியான ஆஜர் 2ம் எதிரி தமிழ்செல்வியிடம் தவணை தொகையை கொடுப்பேன். அதன் பிறகு 1ம் எதிரி என்னிடம் ரூ.10 லட்சம் சீட்டை

ஒரு நபர் 01.02.2020லிருந்து 01.01.2021 வரை 12 மாதங்கள் செலுத்திக் கொண்டிருந்தார் என்றும், மேலும், அந்த சீட்டை அந்த நபரால் தொடர்ந்து கட்ட முடியவில்லை என்றும், அதனால் அந்த நபர் கட்டிய தொகையான ரூ.3,82,500/-யை நீங்கள் செலுத்திவிட்டு அந்த சீட்டை தொடருங்கள் என்று என்னிடம் கூறினார். அதன்படி என்னுடைய பணி கொடை தொகையிலிருந்து ரூ.3,82,500/-யை பண்ருட்டி பாரத வங்கி காசோலை மூலமாக 02.01.2021 அன்று 1வது எதிரி மாரிமுத்துவிடம் கொடுத்தேன். பின் மேற்படி தொகையை என்னுடைய வங்கி கணக்கிலிருந்து மாரிமுத்துவின் வங்கி கணக்கிற்கு எடுத்துக் கொண்டார். அதன் பின் அந்த ரூ.10 இலட்சம் சீட்டை தொடர்ச்சியாக 01.06.2021 வரை ரூ.1,65,600/- பணமாக 1ம் எதிரி மாரிமுத்துவிடம் அல்லது அவர் இல்லாத சமயத்தில் அவர் மனைவியாகிய 2வது எதிரியிடம் செலுத்தியுள்ளேன். மேற்படி 2 சீட்டுகளுக்கும் சேர்த்து மொத்தமாக ரூ.5,96,750/- செலுத்தியுள்ளேன். கடந்த 27.06.2021 அன்று 1ம் எதிரி மாரிமுத்து இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். அதன்பிறகு 1ம் எதிரியின் மனைவியான 2ம் எதிரி தமிழ்செல்வியிடம் தொடர்ந்து சீட்டை நடத்தி முடித்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். முதலில் 2ம் எதிரி ஒப்புக் கெண்டார். பின் தன்னால் முடியாது என்று சொல்லிவிட்டார். நான் செலுத்திய பணத்தை திருப்பி கேட்டதற்கு 2ம் எதிரி பணம் இல்லை என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு, நான் கடலூர் பொருளாதார குற்றர் பிரிவில் 26.08.2021ல் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது தான் மேற்படி நான் கொடுத்த புகார் ஆகும். அது **அ.சா.ஆ.13** ஆகும். (எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்கனவே ஒரு புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்ட காரணத்தினால் இந்த சாட்சியின் புகாரை 161 வாக்குமூலமாக தான் பாவிக்க வேண்டும் என்று ஆட்சேபணை செய்கிறார். ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி புகாருடன் என்னுடைய பாரத வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் 31.12.2020 தேதி முதல் 16.01.2021 தேதி வரைக்கான பரிவர்த்தனைகள் அடங்கிய பக்கத்தின் நகலை தாக்கல் செய்துள்ளேன். அது **அ.சா.ஆ.14** குறியீடு செய்ப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

21.08.2021 அன்று புகார் கொடுத்தேன். மாரிமுத்து இறந்த அன்றே எனக்கு அவரின் இறப்பு குறித்த தகவல் தெரியும். நான் நடை பயிற்சி செய்யும்போழுது மாரிமுத்துவை பார்த்து பழகி தெரிந்துக் கொண்டேன். ரூ.2 லட்சம் சீட்டு ஒன்றும், ரூ.10 லட்சம் சீட்டு ஒன்று மாரிமுத்துவிடம் செலுத்தி வந்தேன். உங்களை போல் மாரிமுத்துவிடம் சீட்டு எடுத்து உங்கள் சீட்டில் உங்களுடன் உறுப்பினராக இருக்கும் யாரையாவது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒரு தவணை தொகை மட்டும் தான் வங்கி மூலமாக பரிவர்த்தனை செய்துள்ளேன். அந்த தொகையானது ரூ.3,82,500/- ஆகும். மற்ற தொகைகளை வங்கி மூலமாக பரிவர்த்தனை செய்யவில்லை. ரொக்கமாக தான் ஒவ்வொரு மாதமும்

கொடுத்தேன். சீட்டு கட்டியதை காண்பிப்பதற்கான ஆவணம் எதாவது உங்களிடம் இருக்கிறதா என்றால் என்னிடம் எந்த ஆவணமும் இல்லை, மாரிமுத்து தான் ஒரு நோட்டில் தவணை தொகை குறித்து வைத்துக் கொள்வார். ரூ.2 லட்சம் சீட்டில் 8 தவணை மட்டுமே செலுத்தியுள்ளீர் மீத தவணை ஏன் செலுத்தவில்லை என்றால் அதற்குள் மாரிமுத்து இறந்துவிட்டார். ரூ.10 லட்சம் சீட்டில் 13வது தவணையில் தான் நான் சேர்ந்தேன். அந்த ரூ.10 லட்சம் சீட்டிலிருந்து விலகிக் கொண்ட நபரின் பெயர் எனக்கு தெரியாது. ரூ.10 லட்சம் சீட்டில் பிப்ரவரி 2021ல் சேர்ந்தேன். ரூ.10 லட்சம் சீட்டில் மொத்தம் 17 தவணை செலுத்தியுள்ளேன். அந்த ரூ.10 லட்சம் சீட்டில் 3 தவணை தொகை பாக்கியுள்ளது. மாரிமுத்து உயிரோடு இருந்த காலகட்டத்தில் எனக்கும் மாரிமுத்துவிற்கும் எந்த மனஸ்தாபமும் இல்லை. என்னுடன் சீட்டு கட்டிய நபர்களுக்கும் மாரிமுத்துவிற்கும் எந்த மனஸ்தாபமும் இல்லை. ஆஜர் எதிரிகளில் தமிழ்செல்வி உள்ளாரா என்றால் ஆம் உள்ளார். 2, 3 தவணை தொகைகளை தமிழ்செல்வியிடம் கொடுத்துள்ளேன். எந்த எந்த சீட்டின் தவணை தொகையை கொடுத்தீர்கள் என்றால் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. ரூ.1,65,600/- தொகையை மொத்தமாக மாரிமுத்துவிடம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. ரூ.1,65,600/-யை மாதமாதம் கசர் போக எவ்வளவு செலுத்தியுள்ளீர் என்றால் சராசரியாக மாதம் ரூ.35,000/- செலுத்தியுள்ளேன். புகாரை நானே தான் பண்ருட்டியில் வைத்து தட்டச்சு செய்து கொண்டு வந்து கொடுத்தேன். புகாரில் ரூ.2 லட்சம் சீட்டின் தவணை தொகையை தமிழ்செல்வியிடம் கொடுத்ததாக செல்லியுள்ளீரா என்றால் இல்லை. தமிழ்செல்வியிடம் தவணை தொகை கொடுத்ததாக செல்வது பொய் என்றால் சரியல்ல. உங்களுக்கும் மாரிமுத்துவிற்கும் இடையே தான் பரிவர்த்தனை நடந்துள்ளது. அவர் இறந்துவிட்ட பிறகு அவரது மனைவியான தமிழ்செல்வியின் மீது பொய்யான இந்த புகாரை கொடுத்துள்ளீர் என்றால் சரியல்ல. மாரிமுத்து இறந்ததற்கு பிறகு தான் முதல் முறையாக தமிழ்செல்வியை நீங்கள் பார்த்துள்ளீர்கள் என்றால் தவறு.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.